Registerd as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

மலர் 8 (23-4-66) இதழ் 75

பராபவ சித்திரை 10 முஹர்ரம் பிறை 1 சனிக்கிழமை

**பீடிகளில் சிறந்தது!**

பீடி உலகில்
சிறந்து விளங்குவது
**முல்லா பீடிகளே**

தயாரிப்பாளரும்
விநியோகஸ்தர்களும்:
**முல்லா பீடி கம்பனி**
கே.கே.எஸ் ரோட் - யாழ்ப்பாணம.

### இலங்கை-இந்திய டென்னிஸ்

இன்றும், நாளையும், மறுதினமும் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே நடைபெறவிருக்கும்டேவிட்கப் இறுதி ஆட்டம் பற்றிய நேரடி இறுதிவர்ணனையை திருவனந்தபுரம் வானெலி நிலையம் ஒலிபரப்பவிருக்கிறது.

மாலை 4 மணி முதல் 6 மணி வரை இது ஒலிபரப்பப்படும். சென்னை நிலையமும், கல்கத்தா நிலையமும் இதை அஞ்சல் செய்யும்.

# யாழ்ப்பாணத்தில் மே தினக்கூட்டங்கள்

## சுகததாசா, திருச்செல்வம் இரு மந்திரிகள் பங்குபற்றுவர்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் இம்முறை நடைபெறவிருக்கும் மேதினக் கூட்டங்களில் தேசிய அரசாங்கத்தின் மந்திரிகளும் கலந்துகொள்ள விருக்கிருர்கள். அரசாங்க எழுதுவினைஞர் சங்க மேதினக் கூட்டத்தில் ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. எம் திருச்செல்வமும் தேசிய தொழிற்சங்க சம்மேளன மேதினக் கூட்டத்தில் தேசீய சேவைகள் மந்திரி திரு. வி. ஏ. சுகததாஸாவும் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மைதானத்தில் தேசிய தொழிற்சங்க சம்மேளனமும், யாழ்ப்பாண நகர மண்டபத்தில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும். யாழ்ப்பாணம் முற்றவெளியில் இலங்கை தொழிற்சங்க சம்மேளனமும், மேதினக் கூட்டங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்துள்ளன.

### தேசீய தொழிற்சங்க சம்மேளனம்

யாழ்ப்பாணத்தில் புதிதாக நிறுவப்பட்ட அகில இலங்கை தேசிய தொழிற்சங்க சம்மேளனத்தின் முதலாவது மேதினக் கூட்டத்தில் தேசிய சேவை மந்திரி திரு. வி. ஏ. சுகததாசா முக்கிய பேச்சாளராக கலந்து கொள்ளவிருக்கிருர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற விருக்கும் இக் கூட்டத்திக்கு யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமை தாங்குவார். 27 தொழிற்சங்கங்கள் கலந்துகொள்ளும் இக் கூட்டம் ஆரம்பமாவதற்கு முதல் நாச்சிமார் கோவிலடியிலிருந்தும், கச்சேரியடியிலிருந்தும் இரு ஊர்வலங்கள் புறப்பட்டு மைதானத்தை வந்தடையும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதியாருவரும், இடதுசாரிக் கட்சிகளிலிருந்து விலகிய திரு. வி. ஆனந்தசங்கரி, திரு. எம். மோதிலால்நேரு, மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகளும் பேசுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய சேவை மந்திரி திரு. வி. ஏ, சுகததாசா மே மாதம் 1-ம் திகதி காலை விசேஷ விமான மூலம் வருவாரென்றும், அன்று காலை யாழ்ப்பாணம் எம்.பி. திரு.ஜி.ஜி. பொன்னம்பலத்துடன், யாழ்ப்பாணம் பஸ் டிப்போக்களை சென்று பார்வையிடுவாரென்றும், அதன்பின் சில பஸ் பிரயாணிகள் சங்கப் பிரதிநிதிகளையும் சந்திப்பாரென்றும், ஊர்வலத்திலும் மேதினக் கூட்டத்திலும் கலந்துகொண்டபின் அன்றிரவு விமானமூலம் கொழும்பு

(6-ம் பக்கம் பார்க்க)

## உலக தமிழ் மகாநாடு இன்று முடியும்

கோலாலம்பூர், ஏப். 22

கோலாலம்பூரில் நடைபெறும் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு இன்று முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இங்குநடைபெறும்தமிழ்த் துறைகளின் அனைத்துலக ஆராய்ச்சிக் கருத்தரங்கின் போது தேசிய பொருட்காட்சி சாலையிலும் மலாயா பல்கலைக்கழக நூல்நிலையத்திலும் சில அரிய பொருட்களும் நூல்களும் காட்சிக்காக வைக்கப்பட்டன.

தென்கிழக்காசியா இந்திய பண்பாட்டுத்தொடர்பு பற்றிய புதைபொருட்கள், வரைபடங்கள், நிழல் படங்கள் ஆகியவையும் பிறவும் தேசியப் பொருட்காட்சி சாலையில் வைக்கப்பட்டன. கண்காட்சி மே மாதம் வரையில் நீடிக்கும்.

பொருட்காட்சி சாலையில் மலாயாவில் கண்டுபிடிக்கப்பட்ட இந்திய தென்கிழக்காசிய பண்பாட்டைக் காட்டும் சிலைகளும், இந்நாட்டு பழந்தமிழர் பற்றிய புகைப்படங்களும் இடம்பெற்றன. மலாக்காவில் வாழ்கின்ற மலாக்கா செட்டியார்களின் அணிகளும் இதில் இடம்பெற்றுள்ளன. இந்தியாவிலிருந்து தென்கிழக்காசியாவிற்கு வாணியும் நடத்த மக்கள் சென்ற வழியைக் குறிக்கும் வரைபடங்களும் இடம்பெறுகின்றன.

இந்த நாட்டில் இதுவரை காட்சிக்காக வைக்கப்படாத தேவி சிலைகளும் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன.

மயாயா பல்கலைக்கழக நூல்நிலையக் கண்காட்சியில் இந்தியா, இலங்கை, ஜெர்மனியிலிருந்து கொண்டுவரப்பட்ட நூல்களும், மலேசிய நூல் வெளியீட்டாளர்களின் நூல்களும், நிழற்படங்களும், வண்ண ஓவியங்களும் இடம்பெற்றுள்ளது.

மொரிசியஸ், பீஜி, பர்மா முதலிய இடங்களில் வெளிவந்த தமிழ் நூல்களும் அச்சுஇயந்திரம் தோன்றிய

(6-ம் பக்கம் பார்க்க)

## இன மத ஐக்கிய மின்மையால் முன்னேற்றம் தடைப்பட்டது

### அச்சுவேலியில் மகாநாயக்கதேரோ

குரும்பசிட்டி, வெள்ளி

"நமது நாடு பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலேயர்களிடமிருந்து சுதந்திரம் பெற்றுக்கொண்ட போதிலும் பூரணமான முன்னேற்றம் வளர்ச்சி அபிவிருத்தி அடைந்தவர்களாய் இல்லாது இருக்கின்ரேம். இதற்கு தேச மக்களிடத்தில் சில காலமாக நிலவிய இன, மத, ஜாதி வேறுபாடுகளும் குரோதங்களும் தான் பிரதான காரணமாகும். சகல இன மக்கள் மத்தியிலும் சகோதரத்துவ ஒற்றுமை பரஸ்பர நல்லெண்ண உறவுகள் ஏற்படுவதன் மூலம் சிறந்த முன்னேற்றத்தினைக் காணமுடியும். சுமார் 2500 வருடங்களுக்கு முன்னர் சித்திரை மாத அமாவாசை தினத்தன்று புத்தர் பெருமான் உங்கள் பகுதிக்கு விஜயம்செய்து புனித பூமியாக்கியுள்ளார். அதே நாளான இன்று பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த விதமாக நானும் மல்வத்தைபௌத்த

(6-ம் பக்கம் பார்க்க)

## குடியிருப்பாளர்களுக்கு அதிக பாதுகாப்பு

### வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் மாற்றம் செய்யப்படும்

கொழும்பு, வெள்ளி

குடியிருப்பாளர்களுக்கு அதிக பாதுகாப்பு ஏற்படுத்தும் நோக்கத்துடன் வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் மாற்றம் செய்ய அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்வதன்மூலம் குடியிருப்பாளர்களின் நலன்களுக்கு மேலும் அதிக பாதுகாப்பு அளிப்பதற்கான மசோதாவொன்று நாளை (சனிக்கிழமை)பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாக ஸ்தலஸ்தாபன அமைச்சின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. ஆர். பிரேமதாசா இன்று பத்திரிகை நிருபர்கள் மகாநாடு ஒன்றில் கூறினர்.

இந்த மசோதாவின்படி குடியிருப்பாளர்களுக்கு மேலும் போதுமான வசதிகள் செய்துகொடுக்கப்படும் அத்துடன் புதிதாக குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கு ஊக்கமளிப்பதும் இந்த மசோதாவின் நோக்கமாகும்

குடியிருப்பாளர்களை வெளியேற்றும்போது வீட்டுச் சொந்தக்காரர்கள் சில நிபந்தனைகளை அனுஷ்டிக்கவேண்டியிருக்குமென்றும் அதுபோலவே குடியிருப்பாளர்களும் சில நிபந்தனைகளை அனுஷ்டிக்கவேண்டியிருக்கும் என்றும் திரு. பிரேமதாசா கூறினர்.

இப்புதிய மசோதாவின் கீழ் கிடைக்கக்கூடியசலுகைகள் ரூபா 100-க்[illegible] பட்ட வாடகைக்கு[illegible]ருக்கும் வாடகைக்[illegible]ளுக்கு மட்டுமே கிடைக்கும்.

**கொழும்பு ஸ்ருடியோ**

கே. கே. எஸ். ரோட் — சுன்னுகம்

**திறப்பு விழா**

அன்புடையீர்!

மேற்படி எனது கிளை ஸ்தாபனத்தை நிகழும் பராபவ ஸு சித்திரை மீ 10-ம் திகதி (23-4-66) சனிக்கிழமை பிற்பகல் 12-15-க்கு மேல்வரும் சுப வேளையில்,

வலி-வடக்கு மாவட்ட அதிபர்

**திரு தி. முருகேசம்பிள்ளை**

அவர்களால் திறந்து வைக்கப்படும். தாங்களும் இக் கொண்டாட்டத்தில் கலந்து எம்மை ஊக்குவிக்கும்வண்ணம் அன்புடன் வேண்டுகின்றேன்,

இங்ஙனம்

கொழும்பு ஸ்ருடியோ, சுன்னுகம்.

அ குகதாசன் (உரிமையாளர்)

148

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

86-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு
20 E 0101 - ரூ. 34,650

2-வது பரிசு
02 A 0189 - ரூ. 13,860

3-வது பரிசு
[illegible]

(6-ம் பக்கம் பார்க்க)

**நகைகளுக்கு யப்பான் ஜுவலர்ஸ்**

64, கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 518 தந்தி: 'யப்பான்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கோவிலுக்குச் சென்று தாழ்மையுடனும் பூரண நம்பிக்கையுடனும் வழிபட்டால் தான் நாம் புனிதமாக முடியும். கோவிலிலிருந்து திரும்பி மதுபானம் முதலிய துராசாரங்களைக் கைக்கொள்ளுவதாயின், கோவில் செல்வதால் சிறிதும் பயனில்லை.

—மகாத்மா காந்தி


# ஈழநாடு

EELA NADU; National Tamil Daily Post Box 49, JAFFNA. Telegrams/EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு சித்திரை மீ உ 10 (23-4-66)


## நல்ல சூழ்நிலை உதயம்

துப்பாக்கிகளாலும் பீரங்கிகளாலும் வெல்ல முடியாத யாழ்ப்பாணத்தை, அன்பினால் மல்வத்தை மகாநாயக தேரோ அவர்கள் வென்று விட்டாரென்று, சர்வசமய சம்மேளனத்திலே நன்றி கூறுகையில் திரு. சீனிவாசன் குறிப்பிட்டபோது, மண்டபத்திலே பலத்த கரகோஷமெழுந்து அவர் கூறியதை ஆமோதித்தது.

யாழ்ப்பாணம், நயினாதீவு இவ்விடங்களில் இரண்டு நாட்களாகத் தமக்கு அளிக்கப்பட்ட அன்பு வரவேற்புகள், தாம் எதிர்பார்த்ததை விட மிக அமோகமாக இருந்ததாயும் இந்நாட்டில் வசிக்கும் இரு முக்கிய சமூகங்களின் உறவுகளும் இனி மேலாக இருப்பதற்கு இது நல்லதோர் அறிகுறி என்றும் மகாநாயக அவர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்கள்.

அவருக்கு இவ்வித மனப்பூர்வமான வரவேற்பு அளித்ததற்காக இப்பகுதிப்பொது மக்களைப் பாராட்ட வேண்டும். இந்த வரவேற்பின் மூலம் சிங்கள - தமிழ் சமூகங்களுக்கிடையே, பழைய தப்பெண்ணங்களும், கசப்புகளும் பறையவும், புதிய நல்லுறவும் ஒத்துழைப்பும் பலப்படவும் நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறதென்பதில் ஐயமில்லை.

தென் பகுதியில் வசிக்கும் சிங்கள மக்கள் வட பகுதியில் வாழும் மக்களுடன் ஒற்றுமையாக, இலங்கையர்களாக வாழ விரும்புகிறார்கள் என்று மகாநாயக தெரிவித்தார். இதேபோல் வட இலங்கையில் வாழும் மக்களும் இலங்கையின் ஏனைய பகுதிகளில் வசிக்கும் சிங்கள மக்களுடன் ஒற்றுமையாகவும் அன்பாகவும் இருக்க விரும்புகிறார்கள் என்றும், இது தங்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புப் பேச்சுகள் மூலம் தெரியவந்ததாகவும் அவர் மகிழ்ச்சியுடன் கூறினார். இரு சமூக நல்லுறவுக்காகவும் ஒற்றுமைக்காகவும், சிரமத்தைச் சிறிதும் பாராமல் இங்கு வந்த நல்லெண்ண தூதுவரின் விஜயம், வெற்றி பெற்று சரித்திரத்தில் பதியத்தக்கதாகவுமுள்ளது.

மற்ற சமயப் பெரியார்களும் யாழ்ப்பாணம் வந்து, ஒரே மேடையில் கூடியிருந்து, ஒற்றுமை, சமாதானம், ஒத்துழைப்பு பற்றி பேசியுள்ளது பெரிய காரியம். அரசியல் தலைவர்களைவிட, சமய குருமார்களுக்கே மக்களிடையே அதிக செல்வாக்கும் மதிப்பும் இருக்கின்றது. மதகுருமார்களின் யோசனைகளையும் ஒத்துழைப்பையும் அரசாங்கம் எவ்வளவு தூரம் பெற முடிகிறதோ அவ்வளவும் நாட்டுக்கு நன்மையாவது மட்டுமின்றி அரசாங்கத்தின் வேலையும் சுலபமாவதாக இருக்கும். பலசமய குருமார்களும் அவ்வப்போது கூடி, நாட்டின் பலபல பிரச்னைகளையும் சிறப்பாக குற்றங்கள், ஒழுக்கக்கேடுகள், முதலியவற்றைப் பற்றி ஆலோசித்து, அவற்றைத்தீர்க்கதக்க யோசனைகளைக்கூறுவதாயின் இந்நாட்டின் சமூக வாழ்வு பல துறைகளிலும் மேம்படுவதாக இருக்கும். குருமார்களும், தங்கள் ஒழுக்க சீலத்தின் மூலமும், ஒத்துழைப்பின் வாயிலாகவும் பொது மக்களின் நம்பிக்கையையும், பெருமதிப்பையும் பெற்று, நாட்டுக்கு மேலான தொண்டாற்ற முடியும்.

ஒவ்வொரு சமயத்தவரும் தங்கள் சமய போதனையின்படி நடந்தால், குடி முதலிய பழக்கங்களை விட்டு தூய வாழ்க்கை வாழ்ந்தால், அவர்கள் தங்கள் பிரச்னைகளை வெகுவாகத் தீர்த்துக் கொள்ளலாமென்று மகாநாயக அவர்கள் சரியாகக் குறிப்பிட்டார்கள். சமயத் தலைவர்கள் தங்களிடையே போட்டி மனப்பான்மையின்றி மக்களுடனே நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு அவர்களுக்கு உதவியாக வாழ்வதன் மூலம் தங்கள் மதிப்பையும், செல்வாக்கையும் அதிகரித்துக்கொண்டு, மக்களுக்கு மேலான சேவை செய்தவர்களாவர். சமயங்கள்பற்றியும். சமயக் குருமார்கள் பற்றியும் வாலிபமக்களிடையே நம்பிக்கைகள் குறைந்து பொதுவாழ்வு சீர்குலையக் கூடிய ஆபத்து ஏற்பட்டிருக்கையில் இந்நாட்டிலுள்ள பல சமயத்தலைவர்களும் முன்வந்து ஒத்துழைக்க முற்பட்டுள்ளது புதிய நம்பிக்கை அளிப்பதாகவுள்ளது.

தமிழர் சிங்களம் கற்க இப்போது விரும்புவதாயும், இதுபோல சிங்கள மக்களும் தமிழைக் கற்க ஆர்வம் காட்டினால் எங்களிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படுவது உறுதியாகுமென்று மகாநாயக கூறியது வீண் போக முடியாது இதற்கு அவரும், பிரதமருமே வழிகாட்டலாம். தமிழ் மக்களிடையே வந்து தமிழில் சில வார்த்தைகளாவது பேசுவதாயின், தமிழ் மக்களின் புண்பட்ட உள்ளம் வெகுவாக ஆறி, நல்ல பலன்கள் ஏற்பட முடியும், பிரதமரும் இப்பகுதிக்கு இதுவரை வந்ததில்லை. இதுபெரிய குறை. இதைத் தீர்க்கவும், தமது நல்லெண்ணத்தை தமிழருக்கு நேரில் தெரிவிக்கவும், பிரதமர் டட்லி சேனநாயகா இப்பகுதிக்கு சீக்கிரம் விஜயம் செய்ய இப்போது நல்ல சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

# உலகதமிழ்மகாநாட்டில் தமிழக பிரதிநிதிகள்

கோலாலம்பூர், ஏப். 22

மலேசியாவில் நடைபெறும் உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் பங்குகொள்ளும் தமிழகப் பிரதிநிதிகள் விபரம் வருமாறு:

திரு. எம். பக்தவத்சலம், சென்னை முதலமைச்சர்.

திரு. பி. டி. ராஜன், மதுரைத்தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர்.

திரு. வி. கார்த்திகேயன் தமிழ்வளர்ச்சி இயக்குநர், விவசாயஇலாகாவின் அரசாங்கச் செயலாளர்.

திரு. எஸ். மகாராஜன் பாண்டிச்சேரி மாநிலநீதி இலாகாத்தலைவர்.

பேராசிரியர் லெ.ப.கரு இராமநாதன் செட்டியார் தமிழ்ப்பேராசிரியர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

திரு. அலரியா வேதமணி வேலூர் கிறீத்துவ மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையின் துணைப்பெரிய சுப்பிரிண்டெண்ட்.

திரு. வெ. வீராசாமி கேரளா பல்கலைக்கழக தமிழ் மொழியாராய்ச்சித் துறை அறிஞர்.

திரு. அ. ச. ஞானசம்பந்தன் தமிழ்வளர்ச்சித்துறைக்கான விசேஷ அதிகாரி.

திரு. ஐ. மகாதேவன் சென்னை கைத்தறி இயக்குநர் இந்தியா நிர்வாக இலாகா உறுப்பினர்.

ஜெயா அருணாசலம் சென்னை தமிழ் எழுத்தாளர்சங்க செயற்குழு உறுப்பினர்.

திரு. டி. ஏசுதாஸ் நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்துவக் கல்லூரியின் தமிழ் விரிவுரையாளர்.

பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர்.

திருமதி. நிர்மலா இராமச்சந்திரன், பரதநாட்டிய கர்நாடக சங்கீத கலைஞர்.

திரு. ஆர். முத்துக்குமாரசாமி மறைமலை அடிகளார் நூல்நிலையத் தலைவர்.

டி, எம். காமேஸ்வரி, அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழி ஆராய்ச்சித்துறை விரிவுரையாளர்.

திரு. எம். இ. மாணிக்கவாசகம்பிள்ளை கேரளாகுருவாயூர் ஸ்ரீ கிருஷ்ணா கல்லூரியின் வரலாற்று பொருளாதார இலாகா விரிவுரையாளர்.

டாக்டர்சுரேஸ் பி.பிள்ளை ரஷ்ய மொழி பெயர்ப்பாளர்.

பேராசிரியை குமாரி மேரி மாசிலாமணி சென்னைபெண்கள் கிறிஸ்துவக் கல்லூரியின் தமிழ்ப்பிரிவுத் தலைவர்.

டாக்டர் எஸ். வி. சுப்பிரமணியன் கேரளா பல்கலைக் கழகதமிழ்த்துறை விரிவுரையாளர்.

குமாரி பி. வி. சகுந்தலா வடஆர்க்காடு திருப்பத்தூர் லேடி இம்மானுலேட்கான்வெண்ட், பி. டி. உதவியாளர்.

திரு. என். சுந்தரவடிவேலு, சென்னை உயர்தரக் கல்வி இயக்குனரும் பொது நூல்நிலைய இயக்குனரும்.

திரு ஆர். தெண்டாயுதம், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை ஆராய்ச்சி மாணவர்.

திரு. எம், இஸ்ரேல்தமிழ் விரிவுரையாளர்.

பேராசிரியர்டாக்டர் எவ். சுப மாணிக்கம் காரைக்குடி அழகப்பாகல்லூரிமுதல்வர்.

டாக்டர் திருமதி பிரேமாநந்தகுமார், திரு. எம். ஞானப்பிரகாசம் சென்னை அயோலக்கல்லூரியின் தமிழ் விரிவுரையாளர்.

விஜயபாரதி பெரம்பூர் ஆர். பி. இ. இ. உயர்நிலைப் பள்ளியின் தமிழ்ப்பண்டிதர்.

டாக்டர் டி. சி. சண்முகம் சென்னைப் பல்கலைக் கழக [illegible] தலைவர்.

டாக்டர் பி. எஸ். நடராஜன் சென்னை சட்டமன்ற உறுப்பினர்.

திரு ஏ ராகவன் எழுத்தாளர்.

பன்மொழிப் புலவர் கா அப்பாத்துரை.

திரு கே பழனியப்பன் மதுரை தமிழ்ச்சங்க செயலாளர்.

பேராசிரியர் டி இ ஞானமூர்த்தி கோயம்புத்தூர் பி எஸ் ஜி கலைக் கல்லூரியின் தமிழ்ப்பிரிவுத்தலைவர்.

பேராசிரியர் கே கே பிள்ளை சென்னை பல்கலைக் கழக இந்திய வரலாற்றுப் போராசிரியர்.

திரு டி கே சண்முகம் நாடகக்கழகத் தலைவர்.

திரு வி எஸ் தியாகராஜ முதலியர்ர் தொழிலதிபர் சென்னை தமிழ் கலாசார அகடாமியின்பொருளாளர்.

திரு கா கணேசன் அழகப்பா செட்டியார் கல்வி அறநிறுவன உறுப்பினர்.

திரு எம் சண்முக சுப்பிரமணியம் சென்னை அரசாங்க சட்ட மன்றத் துணைச் செயலாளர்.

திரு எம் அருணாசலம் பிள்ளை தமிழ்த்துணைப்பேராசிரியர் அண்ணாமலைப்பல்கலைக்கழகம். அண்ணாமலை, சென்னை, மைசூர், ஒஸ்மானியா, கேரளா பல்கலைக்கழகங்களின் பல அகடமி நிறுவனங்களின் உறுப்பினர்.

திரு ஆர் நாகசாமி சென்னை அரசாங்க புதைபெபருள் பிரத்தியேக அதிகாரி,

திரு ஆர் ரங்கராஜன் கோயம்புத்தூர் அரசாங்க கலைக்கல்லூரியின் உளவியல் துறைத்துணைப்பேராசிரியர்.

நாவலர் இரா. நெடுஞ்செழியன் சென்னை சட்டமன்றஎதிர்க்கட்சித்தலைவர்.

எம். சண்முகப் பிள்ளை, அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழி ஆராய்ச்சித்துறையாளர்.

திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம்.

பேராசிரியர் டாக்டர் எம். ஏ. துரைசிரஙசாமி, மதுரை, சென்னை பல்கலைக் கழகக் கிளையின் தமிழ்ப்பிரிவுத் தலைவர்.

திரு. எம். மானுவேல், கேரளா பல்கலைக்கழகத்திலும், திருவனந்தபுரம் ஆங்கிலக் கல்விக்கழகத்திலும் பணியாற்றுகிறார்.

திரு. எம். வி. எம். அழகப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சமூகவியல் விரிவுரையாளர்.

திரு. எஸ். ராமநாதன், இலங்கை ராஜதுரைசிங்கம் நினைவுக் கல்லூரியின் தமிழ் விரிவுரையாளர்.

திரு. நா. வானமாமலை, பாளையங்கோட்டை திருநெல்வேலி சந்திப்பிலுள்ள வானமாமலை டியூடோறியல் கல்லூரி முதல்வர்.

பேராசிரியர் திருஞானசம்பந்தன், சென்னை பிரசிடென்சி கல்லூரியின் சமஸ்கிருத, ஒப்புவமை சித்தாந்த தலைமைப் பேராசிரியர்.

திரு. கே. பி. எஸ். ஹமீது, திருவனந்தபுரம் அகில இந்திய வானொலி நிகழ்ச்சி அதிகாரி.

திரு. வி. சச்சிதானந்தன், அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆங்கில மொழி விரிவுரையாளர்.

திரு. எம். ஆரோக்கியசாமி, சென்னைப் பல்கலைக் கழக இந்திய வரலாற்று ஆராய்ச்சியாளர்.

திரு. க. வெள்ளை வாரணனார், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ஆராய்ச்சியாளர்.

திரு. அ. சீனிவாசராகவன், தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி முதல்வர்.

பேராசிரியர் எஸ். இராமநாதன், சென்னை மத்திய கர்நாடக இசைக்கல்லூரியின் இசைத்துறைப் பேராசிரியர்.

# ஐயாறன் எழுதுகிறது

நயினை நாகபூஷணி அம்மையிடமிருந்து ஓர் 'அர்ஜண்ட்' அழைப்பு வந்தது. மல்வத்தை மகாநாயக தேரோ மணிபல்லவத்துக்கு முதல்முதலாக வருவதைக் காணவருமாறு மோட்டாருடன் ஓர் அன்பரையும் அனுப்பியிருந்தார்

இப்படி வரும் சந்தர்ப்பத்தை விடமுடியுமா? அதுவும் வனப்பும் அன்பும்மிக்க நயினாதீவென்றதும், ஆபீஸ் வேலைகளை அப்படியேபோட்டுக் கிளம்பிவிட்டேன். புங்குடுதீவைச் சேர்ந்த குறிகாட்டுவானிலிருந்து நயினாதீவுக்கு புதிய படகுப்பாதையில் முதல்முதல் சென்றேன். புளியடித் துறைப் பாதை வழியாகச் செல்ல 25 நிமிடமாகையால், புதிய பாதை மூலம் 12 நிமிடங்களில் நயினாதீவுக்குச்செல்ல முடிந்தது. சீக்கிரத்தில் மந்திரி வந்து இப்பாதையைத் திறக்கலாமென்றும், இங்கிருந்து 6 மைல் தூரத்திலுள்ள நெடுந்தீவுக்கும் சீக்கிரத்தில் செல்லலாமென்றும் அறிய மகிழ்ச்சியாக இருந்தது.

காலையிலே 'சுள்' என்று சூரியன் வெகு உக்ரத்தோடு வந்தான். இந்த வெயிலை மகாநாயகாஎப்படித் தாங்கி பாதைவழியே அரை மைலுக்கு மேல் நடந்துவரப் போகிறார் என்று கவலையாக இருந்தது. ஆனால் பெரிய ஆச்சரியம். 9-15-க்கு மகாநாயகா நயினாதீவில் அடிவைத்ததும், மேகக்கூட்டங்கள், சூரியனை மறைத்து குடைபிடித்தன! நம்பமுடியவில்லை. இது தற்செயலா? இல்லை, இல்லை. அங்கு கோவில் கொண்டுள்ள கருணைக்கடலான அம்மையின் அருட்செயல்தான் என்பது என் திடமான நம்பிக்கை.

கோவிலைச்சுற்றி கடற்கரை ஓரமாக புதிதாக சிறிய சுவர் எழுப்பி, பல கருங்கல் நாகர்களை வைத்துள்ளது அழகாக உள்ளது. நேர்த்திக்கடனாக வந்த பல 'நாகர்'கள் கோவிலில் குவிந்திருந்ததாகவும், அதையே இப்படி வைத்துள்ளதாயும் கோவில் நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.

மலைநாட்டிலிருந்தும், தென்னிலங்கையிலிருந்தும் பல சிங்கள பௌத்தர்கள் தினசரி அப்புனிதத் தீவுக்கு வருகின்றார்கள். காலையில் ஒரு கூட்டத்தினர் வந்து, நேரே புதவிகாரைக்குச் சென்றனர். ஆனால் மகாநாயகதேரோ அவர்கள், அரைமைல் தூரம் நடந்து முதலில் நாகபூஷணி அம்மையின் கோவிலுக்கு வந்து தரிசித்துவிட்டே, பின்னர் புத்தவிகாரைக்குச்சென்றார் பௌத்த பீடாதிபதி காட்டிய இம்முன்மாதிரியை மற்ற பௌத்த யாத்திரிகர்களும் பின்பற்றுவாரென்றே நினைக்கிறேன். வெகுதூரத்திலிருந்து வருகிற பௌத்த அன்பர்களை கோவிலார் அன்புடன் வரவேற்று, பிரசாதங்கள் வழங்குவதுடன், அக்கோவில் மகிமையையும் சிங்கள மொழியிலே அச்சிட்டு துண்டுப்பிரசுரங்களை வழங்குவது மிக நல்லது.

மகாநாயகாவை, கோவிலுக்கு வரவேற்ற காட்சியை என்றும் மறக்கமுடியாது. கைலாசநாதக் குருக்கள் அவர்கள், வேதமந்திரங்களைக் கூறி, சம்ஸ்கிருதத்திலே உணர்ச்சியுடனே வரவேற்றார். அதைக்கேட்டு மகாநாயகாவின் உள்ளம் பூரித்தது அவர் முகத்திலே

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ரொடீஷியா பற்றி பிரிட்டிஷ் பார்லிமெண்டில்

## வில்சன் - ஹீத் மோதல்

## பலாத்காரம் உபயோகிக்க ஐ. நா. காலனி கமிட்டி கோரிக்கை

### நடவடிக்கை எடுப்பதானல் 30,000 துருப்புகள் தேவையாம்

லண்டன், ஏப். 22

தேர்தலுக்குப் பின் நடைபெற்ற புதிய பிரிட்டிஷ் பார்லிமெண்டில் பிரதமர் திரு. வில்சனும், எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஹீத்தும் ரொடீஷியா விஷயமாக காரசாரமான மோதலில் இறங்கினர்கள்.

எண்ணெய்க் கப்பல்களை பலாத்காரமாகத் தடுத்து நிறுத்த பாதுகாப்பு சபையிடம் பிரிட்டன் அதிகாரம் கோரியது, ரொடீஷிய நிலைமையைச் சமாளிக்கப் போதுமானது அல்லவென்றும், ரொடீஷியப் பிரதமர் ஸ்மித்துடன் பிரிட்டன் பேச்சுவார்த்தைகள் நடத்தவேண்டும் என்றும் கன்சர்வேட்டிவ் கட்சித்தலைவர் ஹீத் கூறினர். இக்கப்பல்களைப் பலாத்காரமாகத் தடுத்து நிறுத்த ரோயல் கடற்படைக்கு அதிகாரம் இல்லாததால்தான், ஐ. நா. வின் அங்கீகாரம் கோரப்பட்டது என பிரதமர் வில்சன் இதற்குப் பதிலளித்தார்.

ஸ்மித் அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுக்கள் ஏற்கனவே பதிலளிக்கவில்லை எனக் கூறிய பிரதமர் ஸ்மித்தின் கலக நடவடிக்கைக்கு சட்ட சம்மதம் கொடுக்கப் பிரிட்டன் தயாராய் இல்லை என்றும், எனவே அவர்களுடன் பேச்சுநடத்த முடியாது என்றும் குறிப்பிட்டார், அதன்பின் சிரேஷ்ட மந்திரிகளை அழைத்து திரு. வில்சன் ரொடீஷியா பற்றி ஆலோசித்தார்.

**அவசர காலம் நீடிப்பு**

ரொடீஷியாவில் ஸ்மித் அரசாங்கம் அவசரகால நிலைமையைமேலும் 3 மாதங்களுக்கு நீடித்திருக்கிறது.

**பலாத்காரத்துக்கு அனுமதி**

இதக்கிடையில் காலனி சம்பந்தமான ஆட்சி ஐ. நா. விசேஷ கமிட்டி ரொடீஷியாவில் சட்டவிரோத ஆட்சியைக் கவிழ்க்க பலாத்காரம் உட்பட சகல வழிகளையும் கையாளுமாறு பிரிட்டனைக்கேட்டுக் கொண்டது. ஆசிய-ஆபிரிக்க நாடுகள் இது சம்பந்தமாகக் கொண்டுவந்த தீர்மானத்திற்குச் சாதகமாக 19 வாக்குகள் கிடைத்தன; எதிர்த்து எவரும் வாக்களிக்கவில்லை. அமெரிக்கா, பிரிட்டன், இத்தாலி, ஆஸ்திரேலியா, டென்மார்க் ஆகிய நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

பிரிட்டிஷ் பிரதிநிதி பேசுகையில், ரொடீஷியாவில் பிரிட்டன் மேற்கொண்டுள்ள நடவடிக்கை பலனளிக்கும் என தமது நாடு எதிர்பார்ப்பதாகக் கூறினர்.

**30,000 பேர் தேவையாம்**

இதற்கிடையில் ரொடீஷியாவுக்கெதிரான ராணுவ நடவடிக்கை எடுப்பது சுலபமானதல்லவென்றும், இதற்குசுமார் 3,0000 துருப்புக்கள் தேவைப்படும் என்றும், ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபன நாடுகள் இவ்வளவு துருப்புக்களை ஈடுபடுத்தமுடியாது என்றும் லண்டனில் கருதப்படுகிறது.

---

## ரயில் கொள்ளையர் ஒருவர் கைது

லண்டன், ஏப். 22

1963-ம் ஆண்டு நடைபெற்ற ரயில் கொள்ளை சம்பந்தமாக தேடப்பட்டு வந்த ஒருவரை பிரிட்டிஷ் பொலிஸார் கைதுசெய்து இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்வார்கள்.

இவர் மீது சதி, கொள்ளை குற்றங்கள் சாட்டப்பட்டுள்ளன 25 லட்சம் பவுன் அப்போது கொள்ளையடிக்கப்பட்டது. இந்தப்பணம் இன்னும் மீட்கப்படவில்லை.

---

## பாகிஸ்தானுக்கு அரேபிய மசூதி

ராவல்பிண்டி, ஏப், 22

இஸ்லாமாபாத்தில் மத்திய பள்ளி வாசல் ஒன்று அமைப்பதற்கான முழுச் செலவையும் ஸவூதி அரேபியா கொடுத்துதவும் என மன்னர் பைசால் அறிவித்திருக்கிறார்.

---

## மனிதனுக்கு பிளாஸ்டிக் இதயம்

டெக்ஸாஸ், ஏப். 22

டெக்ஸாஸில் அமெரிக்க டாக்டர் குழு ஒன்று மனிதர் ஒருவருக்கு பிளாஸ்டிக் இதயத்தை பொருத்தியிருக்கிறார்கள். அவருடைய இயற்கையான இருதயத்தில் சிகிச்சை செய்யும் பொருட்டு, இந்த ஏற்பாடு.

---

## ஷேக்ஸ்பியர் வாலா

நியுயோர்க், ஏப். 22

ஷேக்ஸ்பியர்வாலா என்ற இந்தியப் படம் இங்கு நல்ல வெற்றி கண்டிருப்பதாயும் இப்போது நியுயோர்க்கில் ஐந்து இடங்களில் காட்டப்படுவதாயும் மேலும் பல அமெரிக்க நகரங்களில் காட்டப்பட இருப்பதாயும் அறிவிக்கப்பட்டது. பத்திரிகைகள் இப்படத்தை வெகு [illegible]

---

## வியட்னம் பற்றி பலமுனைப் பேச்சுக்கள்

சைகோன், ஏப். 22

தென் வியட்னம் பொலிஸ் டைரக்டர் ஜெனரல் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறர். அரசியல் நெருக்கடி காரணமாக பொலிஸ், பாதுகாப்பு படைகளை அரசாங்கம் சீர்திருத்தி வருகிறது.

டாங்ஹுக்கருகில் தென் வியட்னம் மாலுமித் துருப்புக்கள் கடும் சண்டை ஒன்றில் 130 வியட்காங்கியரை நேற்றுக் கொன்றதாக அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் வியட்னம் பற்றிப் பேச, அமெரிக்க செனட்டர் மான்ஸ்பீல்ட் கூறிய யோசனையை ஜப்பான் வரவேற்பதாக அந்நாட்டு வெளி மந்திரி கூறினர். இவ்வித மகாநாட்டை ஜப்பானில் நடத்தலாம் என்றும் அவர் கூறினர்.

டன்மார்க் பிரதமர் நேற்று வியட்னம் பற்றி யுதாண்டுடன் பேசியதாக அறிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து யுதாண்ட் புதிய யோசனையை வெளியிடக்கூடும் என்றும் ஊகிக்கப்பட்டது.

**குரோமிகோ**

இத்தாலிக்கு 3 நாள் விஜயத்தை மேற் கொண்டிருக்கும் ரஷ்ய வெளிநாட்டு மந்திரி திரு. குரோமிகோ நேற்று இத்தாலிய வெளிநாட்டு மந்திரியுடன் வியட்னம் பற்றிப் பேசினர். பாப்பரசருடனும் அவர் இதுபற்றிப் பேசவிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

---

## உலக தமிழ் மகாநாட்டில் ஒருவருக்கு இடமில்லை

### மேற்கு ஜெர்மனி காரணம்

கோலாலம்பூர், ஏப். 22

கிழக்கு பெர்லின் ஹம்போல்ட் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கிழக்கு ஜெர்மன் கல்வியாளர் மிஸ் ஹெல்கா அன்டன் மலேஷிய தமிழ் மகாநாட்டுக்குச் செல்ல வந்து, இன்னும் சென்னையிலேயே தங்கியிருக்கிறர் என்றும், அவர் மகாநாட்டில் கலந்து கொள்ள மாட்டார் என்றும் அறிவிக்கப்பட்டது.

மிஸ் அன்டன் உலகத் தமிழ் மகாநாட்டில் கலந்து கொள்வதையிட்டு மேற்கு ஜெர்மனி மலேஷியாவுக்கு ஆட்சேபனை தெரிவித்திருந்தது. இதைத் தொடர்ந்து மலேஷிய வெளிநாட்டு அமைச்சு மகாநாட்டு ஒழுங்காளர்களுடன் தொடர்வு கொண்டது. இவ்விஷயத்தை வற்புறுத்துவதில்லை என பின்பு தீர்மானிக்கப்பட்டது.

ஹொம் போல்ட் பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள மிஸ் அண்டன் இதன் காரணமாக நாடு திரும்பவிருக்கிறர்.

(பி. [illegible])

---

## “மீஸோ கலகக்காரர் மீண்டும் தாக்கலாம்”

### விழிப்புடன் இருப்பதாக நந்தா அறிவிப்பு

புதுடில்லி, ஏப். 22

காடுகளில் பதுங்கியிருக்கும் மீஸோ கலகக்காரர்கள் மீண்டும் ஒரு தடவை தீவிரமாகத் தாக்கலாம் என்றும் ஆனல் அதனைச் சமாளிக்கும் நிலையில் அரசாங்கம் இருக்கிறதென்றும் உள்துறை மந்திரி திரு. குல்ஸாரிலால் நந்தா இன்று லோகசபையில் தெரிவித்தார்.

மீஸோ மலை ஜாதியினர் குறித்து அரசாங்கம் மெத்தனமாக இருக்கவில்லை என்றும் அவர் கூறினர்.

மீஸோ கலகக்காரர்களின் அபாயம் கட்டுக்கடங்கிவிட்டாலும் அபாயம் முற்றாக நீங்கிவிடவில்லை என்று திரு. நந்தா கூறினர்.

“அவர்கள் இப்பொழுது காடுகளில் இருக்கிறர்கள். அதிகமானவர்கள் கிழக்குப் பாகிஸ்தானில் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன” என்றும் நந்தா தெரிவித்தார்.

---

## சீனவின் ஆக்கிரமிப்பு: ஆஸி. க்கு ஆபத்து

### பிரதமர் ஹோல்ட் எச்சரிக்கை

கான்பரா, ஏப். 22

கம்யூனிஸ்ட் சீனவின் ஆக்கிரமிப்பு, ஆஸ்திரேலியாவுக்கு பெரும் ஆபத்தாக இருக்கிறது என்று ஆஸி. பிரதமர் திரு. ஹோல்ட் ஆஸ்திரேலிய பார்லிமெண்டில் தெரிவித்துள்ளார்.

தமது தென்கிழக்கு ஆசிய சுற்றுவிஜயத்தை ஆரம்பிக்கு முன்னர் அவர் பார்லிமெண்டில் உரை நிகழ்த்தினர். அப்பொழுது அவர், சீனவின் சவாலை சமாளிக்க வேண்டிய அவசியம் குறித்து விளக்கினர்.

கம்யூனிஸ்ட் சீனவின் ஆக்கிரமிக்கும் கொள்கையினல் ஆஸ்திரேலியாவுக்கு ஆபத்து அதிகமாக இருக்கிறது. இதனைத் தடுப்பதற்கு சகல நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. ஹோல்ட் தெரிவித்தார்.

---

## பூட்டோ முயற்சி தோல்வி

அங்காரா, ஏப். 22

அங்காராவில் நடைபெற்ற இரண்டுநாள் செண்டோ வெளிநாட்டு மந்திரிகள் மகாநாடு முடிவுற்றது.

இப்பகுதியில் நாசவேலைகளும் ஆக்கிரமிப்பும் தொடர்ந்து இருப்பதால் செண்டோ ஸ்தாபனம் நீடிக்கவேண்டுமெனக் கூட்டத்திற்குப்பின் விடுக்கப்பட்ட அறிக்கை கூறுகின்றது.

இந்தியா — பாகிஸ்தான் போர் நிறுத்தத்தை அது வரவேற்றது.

காஷ்மீர் விஷயமாகப் பாகிஸ்தானின் கருத்தை அறிக்கையில் சேர்க்கத் திரு. பூட்டோ மேற்கொண்ட முயற்சி தோல்வியுற்றதாகக் கூறப்பட்டது. திரு. பூட்டோவின் தலையீடு காரணமாக மகாநாட்டின் அறிக்கை வெளியாவதில் தாமதம் ஏற்பட்டதாகக் கூறப்பட்டது.

---

## இந்தோனேஷியா நிராகரிப்பு

ஜாகர்த்தா, ஏப். 22

கடந்த புதன்கிழமை சீன தூதராலயத்தை மாணவர் கைப்பற்றியதற்கு அரசாங்கம் தான் காரணமென்ற பீகிங்கின் குற்றச்சாட்டை இந்தோனேஷியா நிராகரித்தது. இதுசம்பந்தமாக விரைவில் சீனவுக்குப் பதிலளிக்கப்படுமென வெளிநாட்டுமந்திரி டாக்டர் [illegible] கூறினர்.

---

## இந்தியா வரும் மேற்கிந்திய கிரிக்கெட்

புதுடில்லி, ஏப். 22

மேற்கிந்தியக் கிரிக்கெட் கோஷ்டி இவ்வாண்டு இறுதியில் 9 வாரம் இந்தியாவில் போட்டிகளில் ஈடுபடுமென அறிவிக்கப்பட்டது.

தலா ஐந்து நாட்கள் நீடிக்கும் 4 டெஸ்டுகளில் அது ஈடுபடும். இதுதவிர தலா 3 நாள் நீடிக்கும் 5 முதல்தர பந்தயங்களிலும் ஒரு பல்கலைக்கழகப் பந்தயத்திலும் அது விளையாடும்.

கிரிக்கெட் வீரர் ஹஸாரேக்கு பணமுடிப்பு வழங்கும்பொருட்டு மற்றோர் பந்தயத்திலும் அது ஈடுபடும்.

---

## போட்டி அரசாங்க முயற்சி தோல்வி

ஜாகர்த்தா, ஏப். 22

இந்தோனேஷியாவில் போட்டி அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்த கம்யூனிஸ்டுகள் மேற்கொண்ட முயற்சியைக் கடற்படையினர் முறியடித்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. மக்காலெம்பு என்ற சிவில் அரசாங்கம் அமைக்க முயற்சிக்கப்பட்டதாம்.

---

## இந்திய றப்பர்

புதுடில்லி, ஏப். 22

இந்தியாவில் ஏற்கனவே 3,50,000 ஏக்கரில் றப்பர் இருப்பதாயும் இவ்வாண்டு அது 4 லட்சம் ஏக்கராக அதிகரிக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது.

---

## சிங்கப்பூர் தளமல்ல

சிங்கப்பூர், ஏப். 22

மலேஷியாவின் பந்தோபஸ்துக்கு எதிராகச் சிங்கப்பூரை ஒரு நடவடிக்கைத் தளமாக்க இந்தோனேஷியாவுக்கு அனுமதியளிக்க முடியாதெனச் சிங்கப்பூர் கூறியுள்ளது.

---

## 1000 நாகர் ஊடுருவல்

புதுடில்லி, ஏப். 22

1000 தலைமறைவு நாகர்கள் தானியங்கி ஆயுதங்கள் லேசுரக இயந்திரத் துப்பாக்கிகள் சகிதம் மணிப்பூரில் ஊடுருவியிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தொழிலையும் செய்ய வாலிபர் முன்வர வேண்டும்

## வேலையில்லா திண்டாட்டத்தை நீக்க எம். பி. யோசனை

உடுப்பிட்டி, வியா.

''உண்மையாக ஆராய்ந்து பார்த்தால் இக்காலத்தில் வாலிபர்களுக்கு வேலையில்லாத்திண்டாட்டம் இருப்பதாகக் கூறமுடியாது. எத்தனையோ ஆயிரக்கணக்கான சிறியவேலைகளும், தற்காலிக வேலைகளும் இருக்கும்போது வாலிபர்கள் அவ்வேலைகளுக்குச் செல்ல வெட்கப்படுகிறார்கள். மேலும் சிறு குடிசைக் கைத்தொழில்களில் ஈடுபடவும் தயங்குகிறார்கள். கிராமங்களில் வாழ்பவர்கள் பெண்களுட்படக் குடிசைக் கைத்தொழிலில் எவ்வளவோ முன்னேறலாம். முன்னேற்றம் முயற்சியிலே தான் தங்கியுள்ளது.''

''இவ்வாறு பருத்தித்துறைஎம். பி. திரு. துரைரத்தினம் கம்பர்மலைபாரதி சனசமூகநிலைய 15-வது ஆண்டு விழாவில் ''கிராம சமுதாயம்'' என்பது பற்றிப் பேசுகையில் கூறினார்.

திரு. ம. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. துரைரத்தினம் தொடர்ந்து கூறியதாவது:-

இலங்கையில் தரமான தோட்ட நிலங்கள் இல்லாத பகுதிகளில்கூட அதிகளவு குத்தகை வாங்குகிறார்கள். இதனால் விவசாயிகள் கொடுக்கும் குத்தகைக்கு அஞ்சித் தறைகளைப் பண்படுத்தாமல் விடுகிறார்கள். இனிமேலாவது தறைச் சொந்தக்காரர்கள் விவசாயிகளிடமிருந்து வாங்கும் குத்தகையைக் குறைத்து அவர்களை விளைபொருள் உற்பத்தியில் ஊக்கப்படுத்த வேண்டும். கடற்கரையோரப்பகுதி மக்கள் மீன்பிடித்தொழிலை விருத்தி செய்து கொள்ளவேண்டும். இலங்கைக் கடல் மிகவும் வளம் பொருந்தியது. படித்த வாலிபர்கள் வெட்கமின்றி மீன்பிடித் தொழிலில் பயிற்சிபெற்று அத்தொழிலைச் செய்ய முன்வரவேண்டும். மேற்படி திட்டங்களை வாயளவில் கூறிக்கொள்வதோடு மாத்திரமன்றிச் செயற்படுத்துவதில் தீவிரமாக முயலவேண்டும்''

உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில், பெரும்பான்மைச் சிங்கள இனத்துடன் தமிழர்களாகிய நாம் ஒற்றுமையாக இருக்கவேண்டும். நாம் அமைதியாக வாழ்வதற்கான சூழ்நிலைகளைத் தேசிய அரசாங்கம் படிப்படியாக ஏற்படுத்திவருகிறது. தேசிய அரசுக்குப் பரிபூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்கி ஜனநாயக வளர்ச்சிக்காகப்பாடுபடவேண்டும்'' என்று கூறினார்.

பண்டிதை சைவப்புலவர் தங்கம்மா அப்பாக்குட்டி ''இளங்கோ கண்ட கண்ணகி'' என்பது பற்றியும், திரு. ம. ரஞ்சித்சிங் ''பழமையும் புதுமையும் பற்றியும் பேசினர். திரு. கி. குணசிங்கராஜாவும் பேசினார்.

கண்ணன் கோஷ்டியினரின் வாத்திய இசைக் கச்சேரியும், பரதநாட்டியமும் நடைபெற்றன.

## வர்த்தகரின் அன்பளிப்பு

வல்வெட்டித்துறை, வெள்ளி

கோப்பாய்ச் சந்தியில் வல்வெட்டித்துறை வர்த்தகர் ஒருவரால் நவீன முறையில் கட்டி அன்பளிப்பு செய்யப்பட்ட பஸ்ஸுக்கு பிரயாணிகள் தங்கும் இடம் ஒன்றை கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை திறந்துவைத்தார்.

## தேசிய சேவை மந்திரி சுகததாசா

### இம்மாதம் 30-ந் திகதி பருத்தித்துறை விஜயம்

பருத்தித்துறை, வெள்ளி

தேசிய சேவை விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. சுகததாசா இம்மாதம் 30-ந் திகதி பருத்தித்துறைக்கு விஜயம் செய்வார் எனத் தெரிய வருகிறது.

இ. போ. ச. டிப்போ தொழிலாளர்களது விளையாட்டுப்போட்டி விழாவில் பிரதம அழைப்பாளராக அவர் கலந்துகொண்டு பரிசில்களை வழங்குவார்.

## பருத்தித்துறையில் உதவிமந்திரி அதிர்ச்சி!

வல்வெட்டித்துறை, வெள்ளி

பருத்தித்துறைக்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்த தேசியசேவைகள் உதவி அமைச்சர் திரு. வெலகெதர பருத்தித்துறை எம். பி, உடுப்பிட்டி எம். பி. ஆகியோருடன் பருத்தித்துறை பஸ் டிப்போவையும், பஸ் தங்கும் நிலையத்தையும் பார்வையிட்டதும் பெரும் அதிர்ச்சியடைந்ததாகக் காணப்பட்டார்.

பஸ் தங்கும் நிலையம் குறுகிய விசாலமுடையதாக இருப்பதால் பஸ்கள் எப்படியாக தங்கிப் போக்குவரத்துச் செய்து வருவதாக பருத்தித்துறை எம். பி.யிடமும் பஸ் ஊழியர்களிடமும் மிகவும் அக்கறையாக விசாரித்தார். தாம் இந்தக் குறைகளைக் கூடிய விரைவில் நிவிர்த்தி செய்து தருவதாகவும் வாக்குறுதி அளித்தார்.

## கலைமன்றத்தின் 4-வது நிறைவுவிழா

பருத்தித்துறை, வெள்ளி

புலோலி கிழக்கு ஞான சம்பந்தர் கலைமன்ற நான்காவது ஆண்டு நிறைவு விழா நேற்றையதினம் திரு. எம். கணேசன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டுப்பிரார்த்தனை, பஜனை, ஆகியவையுடன் ஆரம்பமான மேற்படி விழாவில் மகாதேவ ஆச்சிரமத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ வடிவேல் சுவாமிகள், அதிவண. பிதா ரி. ஏ. யே. மதுரநாயகம், வண. சாமுவேல் வி. நல்லையா, எம். அப்துல் றஸாக் மௌலவி ஆகியோர் பிரதம பேச்சாளர்களாகக் கலந்துகொண்டனர்.

நண்பகல் அமரர் ரி. வி. திருஞான சம்பந்தர் குருபூசையும் அன்னதானமும் நடைபெற்றன.

மாலை சங்கீதம், பேச்சு, நடனம், நாடகம் முதலான கலைநிகழ்ச்சிகட்கு மாவட்ட நீதிபதி திரு அப்துல் காதர் பிரமவிருந்தினராகக் கலந்து கொண்டார்.

## ரூபா 18 கோடி பாலம்

கல்கத்தா, ஏப். 22

ஹூக்ளி நதியில் ரூ 18 கோடிசெலவில் இரண்டாவதுபாலமொன்று கட்டப்பட இருக்கிறது. 120 அடி உயரமான இப் பாலம் 1971-72ல்பூர்த்தியாகும்.

## பொலிஸ் இன்ஸ்பெக்டரை தாக்கமுயன்றவழக்கு ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், வெள்ளி

கீரிமலையைச் சேர்ந்த சின்னத்தம்பி நாகமணி என்பவர் சென்ற வருடம் ஆகஸ்ட் மாதம் பத்தாம் திகதி கீரிமலையைச் சேர்ந்த விசாலாட்சி என்பவரின் வீட்டில் சட்டவிரோதமாக சாராயம் வைத்திருப்பதாகக் கிடைத்த தகவலைக்கொண்டு பரிசோதிக்கச்சென்ற காங்கேசன்துறை பொலிஸ் உதவி இன்ஸ்பெக்டர் திரு. ஜாவாரை அவரின் கடமையைச்செய்யவிடாமல் அலவாங்கால் அடிக்கப்போனதாகவும், அவரைக் கெட்ட வார்த்தைகளால் ஏசியதாகவும் காங்கேசன்துறைப் பொலிசாரினால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ் எச். அத்துறுபான முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதும் எதிரிதரப்பு வழக்கறிஞர் திரு. செல்வரத்தினம் மாஜிஸ்டிரேட்டிடம் தான் இவ்வழக்கு விசாரணைக்கு ஆயத்தமில்லையென்று கூறினார். ஏன்? என்று கேட்ட போது எதிரிதரப்பு வழக்கறிஞர் மாஜிஸ்டிரேட்டிடம் தான் இவ்வழக்கு சம்பந்தமாக உதவி இன்ஸ்பெக்டர் திரு. ஜாவாரின் முதல் முறைப்பாட்டின் வாக்குமூல பிரதி ஒன்று தரும்படி இருதடவை காங்கேசன்துறைப் பொலிசாரிடம் எழுத்து மூலம் கேட்டதாகவும், அப்போது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இருந்த இன்ஸ்பெக்டர் பெர்னாண்டோ தரமறுத்துவிட்டதாகவும், பின்னர் இன்ஸ்பெக்டர் மூர்த்தி பொறுப்பதிகாரியாக வந்த பின்னர் திரும்பவும் எழுத்து மூலம் கேட்டதாகவும் இதுசம்பந்தமாக பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கும் புகார் செய்ததாகவும் அவர்கள் இருவரிடமும் இருந்து இதுவரை பதில் கிடைக்கவில்லையென்றும் இவ்வழக்கில் சட்டப்படி பொலிசார் உதவி இன்ஸ்பெக்டர் ஜாவாரின் முதல் முறைப்பாட்டின் பிரதிதரவேண்டும் என்றும் ஆனால் தரவில்லையென்றும்

(6-ம் பக்கம் பார்க்க)


நல்ல காலம் வருகுது!
நல்ல காலம் வருகுது!




உங்கள் வீடு தேடிவரும் சன்லைட் மங்கையிடம்

10/- ரூபாய் பரிசு பெறுங்கள்!

இலகுவாக நீங்கள் 10/- ரூபாய் பரிசு பெற இதோ ஒரு சந்தர்ப்பம்!

மேலே படத்தில் காணப்படுபவர் போன்ற ஒரு சன்லைட் மங்கை, ஏப்ரல் 28ம் தேதிக்கும் 30ம் தேதிக்கும் இடையில் நூற்றுக்கணக்கான வீடுகளுக்கு விஜயம் செய்வார். அவர் விஜயம் செய்யும் வீடு தோறும், உங்கள் தகுதியை ஆராய்ந்து பத்து ரூபாய் வீதம் பரிசுகளை வழங்குவார்.

பத்து ரூபாய் பரிசுக்குத் தகுதி பெற நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இவ்வளவுதான்:

உங்கள் வீட்டில் இரண்டு கட்டி சன்லைட் வைத்திருங்கள். ஒன்று பாவனையிலும் ஒன்று புதிதாகவும் இருக்க வேண்டும். இரண்டுகட்டிகளையும் சன்லைட் மங்கையிடம் காட்டுங்கள். "நீங்கள் ஏன் சன்லைட் உபயோகிக்கிறீர்கள்?" என்று அவர் கேட்பார்.

"சன்லைட் தருவது மேலும் பிரகாச சலவை; அத்துடன் சன்லைட்டினால் ஒரு உடையைச் சலவை செய்யும் செலவு, ஒரு சதத்திலும் குறைவு" என்று சரியாகப் பதில் கூறுங்கள். இந்தச்சரியான விடையைக் கூறினால் உடனே அவர் உங்களுக்கு 10/- ரூபாய் பரிசு கொடுப்பார்.

இந்தப் பரிசுத் திட்டம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் செல்லுபடியாகும்.

உங்கள் சலவை வேலைகள் அனைத்தையும், வீட்டில் சன்லைட்டினால் செய்து, சுத்தமான பிரகாசமான ஆடைகளை அணியுங்கள். கொடுக்கும் பணத்துக்குத் தகுந்த சிறந்த பெறுமதி தருவது சன்லைட்

சன்லைட் மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது- வேறெந்த சோப்பும் நிகர் நிற்க முடியாத பிரகாசம்.




JWT/5/4x56 (P)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்


அரசாங்க கேள்விப்பத்திரங்கள்
யாழ்ப்பாணக் கச்சேரி

என் 797 இராமநாதபுரம் திட்டத்தின்கீழ் உள்ள உள் ரோட்டுகளைத் திருத்துதல், புதுமுறிப்பு-அக்கராயன் ரோட்டு அமைத்தல். கேள்விப்பத்திரங்கள் முடிவு திகதி 20-5-66 இதன் முழு விபரங்களுக்கும் 22-4-66 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1 ம் பகுதி, 11-ம் தொகுதியைப் பார்க்கவும். 2439

சுன்னுகம்
ஸ்ருடியோ
பிறின்ஸெஸ்
13வது ஆண்டு
நிறைவு விழாவை
முன்னிட்டு
10-4-66 — 30-4-66
அரைச் சலார்
133

REGAL—JAFFNA
NOW SHOWING!
CONNIE FRANCIS
JIM HUTTON
in
LOOKING FOR LOVE
(Panavision - Metro Color)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர்.-சரோஜாதேவி
நடித்த
எங்கள் வீட்டுப்பிள்ளை

ராஜா
(யாழ்ப்பாணம்)
2-30, 6-30, 9-45க்கு மட்டும்
எம். ஜி. ஆர். - அஞ்சலிதேவி
நடித்த
சர்வாதிகாரி
கலரி 50 சதம்.


## தெல்லிப்பளை உழுகுடைப்பதித் துர்க்காதேவி ஆலயத் திருப்பணி விஞ்ஞாபனம்

மேற்படி ஆலயத் திருப்பணிச் சபையின் அறிக்கையும், வரவு செலவு விபரங்களும் அச்சிட்டு 22-12-65ல் வெளியிடப்பட்டன. ஆலயத்தின் சுற்றுமதில், வசந்த மண்டபம், மணிக்கோபுரம் முதலிய திருப்பணிகள் மேலும் செய்யவேண்டியிருப்பதினுல் சிவநேயச் செல்வர்கள் தங்களால் இயன்ற பொருள் உதவுமாறு வேண்டுகிறேும். மேற்படி ஆலயத் திருப்பணிச் சபைத் தலைவர், திரு. சே. தியாகராசா, இணைக்காரியதரிசிகள் திருவாளர்கள் தம்பு பொன்னம்பலம், க. வேலாயுதம், தனதிகாரி திரு. தி. ஆறுமுகசுவாமி ஆகியோர் திருப்பணி நிதி சேகரிக்க நியமிக்கப்பட்டிருக்கிறுர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேும்.

வ. சுப்பிரமணியம்,
காரியதரிசி,
தர்மகர்த்தாசபை.

தெல்லிப்பளை,
20-4-66. 151

## பங்களுரில்

பங்களுர், ஏப். 22
பங்களுரில் ஒருவாரம் பொதுக் கூட்டங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டிருக்கின்றது.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


## நெல்சன் கோஷ்டியல்ல

யாழ்ப்பாணம், சனி
கடற்கரை மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியொன்றில் நெல்ஸன் கோஷ்டி கலந்துகொண்டதாக வெளியானசெய்தி தவறுனதென்றும் அன்று நடைபெற்ற போட்டியில் நெல்சன் கோஷ்டி விளையாடவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி
தமிழ் சிங்களப் புதுவருடத்தை முன்னிட்டு திருநெல்வேலி கிழக்கு வைரவர் கோவில் வாசல் இந்து இளைஞர் இயக்கத்தாராலும் சமூக சேவைச் சங்கத்தாராலும் கொண்டாடப்பட்ட 17-வது ஆண்டு விழாவையொட்டி நடாத்தப்பட்ட பல்வேறு போட்டிகளினதும் முடிவுகள்:—

அகிலஇலங்கை 25 மைல் ஆண்கள் சைக்கிளோட்டம்: என். மகேந்திரன், ஆர். இரத்தினம், ஏ. எஸ். எம். றபீக்.

அகிலஇலங்கை 5 மைல் பெண்கள் சைக்கிளோட்டம்: ஜெயகுமாரி மரியநாயகம், எஸ். ஏ. சந்திரா, பொ. பூபதி.

அகில இலங்கை 5 மைல் ஆண்கள் மரதம் ஓட்டம்: ஏ. விநாயகமூர்த்தி, எஸ். சாம்பசிவமூர்த்தி, எஸ். கதிர்காமநாதன்.

விநோத உடைப் போட்டிகள்: (மேற்பிரிவு) திருச்செல்வம் கோஷ்டி, செ. சிவலிங்கம், க. துரைராஜா. கீழ்ப்பிரிவு: மு. விஜயரத்தினம், த. யோகானந்தம், மு. குணரத்தினம். அதிமேற்பிரிவு: இ. கந்தசாமி, குமார் தனபால்.

# வரி விளம்பரம்


### தேவை

மே மாதம் 15-ந் திகதி பதவியேற்று கடமையாற்ற கூட்டுறவுக் கல்லூரியில் பயிற்சிபெற்று சித்திஎய்திய முகாமையாளர் தேவை. வயது: 20—40 வரை. மாத வேதனம்: அனுபவத்திற்கேற்ப 80/- — 100/- இடையில் நிர்ணயிக்கப்படும். இருநற்சாட்சிப் பத்திரங்களுடன் காரியதரிசி, அராலி, விக்னேஸ்வர ப. நோ. சங்கம், அராலி என்ற விலாசத்திற்கு ஏப்ரல் 30-ந் திகதிக்குப் பிந்தாமல் விண்ணப்பிக்கவும். பிணைப் பணம் 1000/- ஆதனம் 2000/-
251

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கண்டி ரோட், நெடுங்குளம் சந்திக் கருகாமைல்யி3 3/4 பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு: யோ. அப்புத்துரை, கடுக்காட்டி ஒழுங்கை, நாயன் மார்கட்டு, யாழ்ப்பாணம். 257

யாழ்ப்பாண இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும். க. ஆதித்தன். 465, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 258

ஆனைக்கோட்டையில் ரோட்டு ஓரத்துடன் வீடு கட்டுவதற்கு உகந்த நிலம் ஐந்து தொடக்கம், டத்துப் பரப்புவரை விற்பனைக்கு உண்டு. 14ஏ, சாள்ஸ் டிறைவ், கொழும்பு-3. 235

### தேவை

20 வயதுக்கு உட்பட்ட விற்பனையாளர்கள் தேவை. விபரங்களுக்கு நேரில் வரவும். 256, நாவலர் ரோட், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 256

ஆங்கிலத்தில் தட்டெழுத்துத் தெரிந்த, தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் நல்ல கையெழுத்துள்ள லிகிதர் / கஷியர் தேவை. பிணை ரொக்கம் ரூபா 500/- கட்டக்கூடியவராக இருக்க வேண்டும். 26-4-66க்கு முன் விண்ணப்பிக்கவும். S. K. கணேசன், 85, சிலாபம் வீதி, கொச்சிக்கடை, நீர்கொழும்பு. 252

பேக்கரியில் பணப்பொறுப்பாளராகவும் உதவி மனேச்சராகவும் கடமை செய்யக்கூடியவர் தேவை. சிங்களம் நன்கு பேசத் தெரிந்திருத்தல் நலம். பிணை ரொக்கம் ரூபா 500/- கட்டக்கூடியவராக இருத்தல் வேண்டும். S. K. கணேசன், 85, சிலாபம் வீதி, கொச்சிக்கடை, நீர்கொழும்பு. 253

சாய்ப்புச்சாமான் சில்லறை வியாபாரக் கடைக்கு திறமையானவர்கள் தேவை. சிங்களம் பேசும் அறிவு விரும்பப்படும். S. K. கணேசன், 85, சிலாபம் வீதி, கொச்சிக்கடை, நீர்கொழும்பு. 254

தாதிமார், பணிப்பெண்கள், பணக்கணக்காளர், லிகிதர் ஆகியோர் தேவை. விபரங்களுக்கு நேரில் காணுங்கள். சாரதாதேவி வைத்தியசாலைச் சங்கம், சட்டநாதர்வீதி— நல்லூர் யாழ்ப்பாணம். 249

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரஞனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


சுழிபுரம், வெள்ளி
சுழிபுரப்பகுதிக்கு மின்சாரம் வேண்டும் என இப்பகுதி பொதுமக்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளனர். அடுத்த ஆண்டு முற்பகுதிக்குள் மின்சாரம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சுழிபுரம்கிராம சபையினரையும் பொதுமக்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

## யாழ். உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி
யாழ், உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் உதைபப்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் 'ஏ' பிரிவும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் 'ஏ' பிரிவும் மிகவும் காரசாரமான போட்டியொன்றில் பங்கு கொண்டன. உண்மையில் இடைவேளை வரைச்சும் போட்டி வெகு ரசிப்பாகக் காணப்பட்டதெனினும் சிறந்த 'பாசிங்' விளையாட்டை விளையாடிய சென். மேரிஸ் கோஷ்டியினர் அரியாலைக் கோஷ்டியினரைச் சுற்றி வளைத்துப் படாதபாடுபடுத்தினர். பலமுறை கோல்களை போட முயற்சித்தனர். இடைவேளையின்போது இரு கோஷ்டியும் ஒரு கோலுமே போடவில்லை. இடைவேளையின்பின்னர் சென். மேரிஸ் கோஷ்டியில் மேலும் முன்னேற்றம் காணப்பட்டது. அடுத்தடுத்து கோல்களை வெளுத்துவாங்கினர். அன்ரன் என்னும் வீரர் 2 கோல்களும் சேவியர் ஒரு கோலும் போட்டுசென்மேரிஸ் கோஷ்டியினர் அரியாலைக் கோஷ்டியை 3—0 கோல்களால் வெற்றியீட்டினர்.

### வெற்றிதோல்வியில்லை

இச்சங்கத்தின் ஆதரவில் போயாதினத்தையொட்டி நடைபெற்ற போட்டிகளில் முதலில் கிருஸ் கொப்பர்ஸ் கோஷ்டியினரும், ஒலிம்பிக் கோஷ்டியினரும் போட்டியிட்டனர். ஆரம்பத்திலிருந்து முடிவுவரைஇப்போட்டி ரசிப்பாகக் காணப்படாதது குறிப்பிடத்தக்கது. எனினும் இடைவேளைக்கு முன் நடந்த போட்டியிலும் பார்க்க இடைவேளைக்குப் பின்பு நடந்த போட்டி ஓரளவு சிறப்பாகக் காணப்பட்டது. இப்போட்டியில் இருகோஷ்டியுமே தலா மும்மூன்று கோல்கள் பெற்று வெற்றி தோல்வியின்றி ஆட்டத்தை முடித்தனர்.

### சென். அந்தனீஸ் வெற்றி

பாஷையூர் சென். அந்தனிஸ் உதைபந்தாட்டக் கோஷ்டியினருக்கும், ஜொலிஸ்ராஸ் கோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற 'ஏ' பிரிவுப் போட்டியானது மிகவும் ரசிப்பாகக் காணப்பட்டது. இருகோஷ்டியும் ஆட்டத்தின் தொடக்கத்தில் அபாரமாகப் போட்டியிட்டன. எனினும் நேரம் போகப்போக ஜொலிஸ்ராஸ்கோஷ்டியின் விளையாட்டுத்தரம் குறைவாகக் காணப்பட்டது குறிப்பிடத்

(6-ம் பக்கம் பார்க்க)


சிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணு (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)
மொடேர்ன் (பண்டாரவளை) விஜிதா (ஹட்டன்) தீவொளி (நுவரெலியா)



சிவாஜி கணேசன் - சாவித்திரி
(9 மாறுபட்ட வேடங்களில்)
நாகேஷ் —— மனோரமா
மற்றும் பலர் நடித்திருக்கும்
நவராத்திரி


## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!
நிகழும் பராபவ வருஷம் சித்திரை மாதம் 12-ந் திகதி (25-4-66) திங்கட்கிழமை முற்பகல் 10-48 மணி முதல் 11-23 மணி வரை வரும் சுபமுகூர்த்தத்தில்,

| | |
|---|---|
| எனது ஏகபுத்திரன், திருநிறை செல்வன் **முத்துத்தம்பி கைலாயபிள்ளை** (பிஸ்னஸ் பாட்னர், மாப்பியன் மில் மானிப்பாய்) அவர்களுக்கும் | எங்கள் புத்திரி திருநிறை செல்வி **இராஜலட்சுமி அவர்களுக்கும்** |

திருமணம் நடாத்தத் திருவருள் துணைகொண்டு நிச்சயித்திருப்பதால், தாங்கள் சுற்றஞ்சூழச் சமுகந்தந்து, மணமக்களை ஆசிர்வதித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேும்.

கடுக்கன் பூணல் காலை 7-00 — 7-25 மணி மணமகன் இல்லம்
வரவேற்புபசரணை: மாலை 5-00—7-00 மணி மணமகன் இல்லம்

இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்

| | |
|---|---|
| **திருமதி அன்னம்மா** (மணமகனின் தாயார்) | **க. சாந்தலிங்கமும் பாரியாரும்** (மணமகளின் பெற்றேர்) |

வரவேற்பாளர்:
த. சபாரத்தினமும் பாரியாரும்
சி. திருநாவுக்கரசும் பாரியாரும்
''செல்வகிரி''
அம்மன் கோவிலடி,
சுதுமலை, மானிப்பாய்.

இல. 25, சீனிவாசகம் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

150

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன மத ஐக்கிய மின்மையால்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பீடத்தைச் சேர்ந்த மற்றும் பௌத்த குருமார்களுடன் உங்கள் மத்தியில் நல்லெண்ண விஜயம் செய்திருக்கின்றேன். இதை ஒரு புனித தினமாகவே நான் கருதுகின்றேன்''

அச்சுவேலி பத்தைமேனிப் பகுதியில் தமிழ் பௌத்த சங்க ஆதரவில் அமைக்கப்பட்டுள்ள சிங்கள-தமிழ் பௌத்த பாடசாலையினைத் திறந்துவைத்த மல்வத்தை பீடாதிபதி அமுனுகம ஸ்ரீ விபாஸி தேரோ தமது பேச்சின்போது மேற்கண்டவாறு கூறினார் மகாநாயக்க தேரோ ஆரம்பத்தில் பௌத்த கொடியினை ஏற்றிவைத்ததுடன் சைவசமய ஆசாரப்படி குத்துவிளக்கில் தீபம் ஏற்றி, பாடசாலையைத்திறந்து வைத்தார். மகாநாயக்க தேரோவும், மற்றைய பௌத்த குருமாரும், அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவும் தமிழ்-பௌத்த சங்கத்தலைவர் திரு. கே. ஐயாத்துரையினால் மலர் செண்டு கையளித்தும் மலர்மாலைகள் அணிவித்தும் வரவேற்கப்பட்டனர்.

மகாநாயக்கதேரோ தமது உரையின் போது மேலும் கூறியதாவது:-

## ஒழுக்கம் குன்றுகிறது

இன்றைய கல்வித்திட்டத்தினால் மாணவர்கள் பிழையான வழியிலும் தவறாகவும் வழிநடத்தப்படுகின்றனர். பண்டைய காலங்களில் பிள்ளைகள் பெற்றோருக்கும், ஆசிரியர்கள் மதகுருமாருக்கும் மதிப்பளித்து ஒழுக்கத்துடன் கீழ்ப்படிந்துநடந்து வந்துள்ளனர். அதனால் பாலும் தேனும் வழிந்தோடும் நாடு எனவும், தர்மதுவீபம் என்றும் அழைக்கப்பட்டது. தற்போது தமது குழந்தைகளின் கல்வியைப் பற்றிப் பெற்றோர் பயப்படுகின்றனர். உயர்தர கல்விக்கூடங்களில் கற்கும் மாணவர்களைக் காணப் பொதுமக்கள் அஞ்சுகின்றனர். ஆகவே சிறுவர்கள், மதகுரு, ஆசிரியர், பெற்றோர்களிடத்தில் அன்பு, சகிப்புத்தன்மை கீழ்ப்படிவுடனும் நடந்து சிறப்பான வாழ்க்கை நடாத்தி நாட்டின் சிறப்புக்கு வழிகாட்டவேண்டும்.

## வருமானவரி

கொழும்பு, வெள்ளி வருமானவரி செலுத்துவது சம்பந்தமான நடைமுறைகளை இறைரிப் பகுதி தளர்த்தியுள்ளது.

## மரண அறிவித்தல்

இளைப்பாறிய புகையிரதப் பகுதி உத்தியோகத்தர் ஆறுமுகம் பொன்னையா இராசரத்தினம் அவர்கள் சிவபதமடைந்துவிட்டார்கள். இவர் பராசக்தியின் அருமைக் கணவரும், அருளானந்தம்(கொழும்பு பொலிஸ் காரியாலயம்), கருணாநிதி, தயாநிதி, குணானந்தன், திருமதி சிவயோகநாயகி சபாரத்தினம், தையல்நாயகி, தில்லைநாயகி, மகாலட்சுமி ஆகியோரின் அருமைத் தந்தையும் மாவார். அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு வண்ணார்பண்ணை வடமேற்கு ஆனைக்கோட்டையிலுள்ள அவரது இல்லத்திலிருந்து கோம்பையன் மணல் மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும். 260

## உலக தமிழ்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொழுது 17-ம், 18-ம் நூற்றூண்டுகளில் வெளிவந்த நூல்களும் இக்காட்சியில் இடம்பெறுகின்றன.

திருக்குறளின் பல மொழி பெயர்ப்பு நூல்களும் இக்கண்காட்சியில் இடம் பெறும் நூல்களில் குறிப்பிடத்தக்கவையாகும்.

ஆராய்ச்சிக் கருத்தரங்க மகாநாட்டிற்குப் பார்வையாளராக வருகை தந்திருக்கும்குமாரி பிரான் கோய்ஸ், எம். ஏ. என்பவர் பிரான்சு தேசத்தைச் சேர்ந்தவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் புதைபொருளாராய்ச்சித்துறையில் படிக்கிறார்.

வெளிநாட்டில் இருப்பவர்கள்இந்த ஆய்வுமாநாட்டில் எவ்வளவு ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதை அறிந்து போகத்தான் வந்திருப்பதாய் அவர் தன்நோக்கத்தை விவரித்தார். தமிழ் மொழியை விரும்பிப் படிக்கக் காரணம் என்னவென்று கேட்டபோது, இந்தியகலாசார வளர்ச்சிக்குத் தமிழ் மொழி எந்தஅளவுக்குஉதவி செய்கிறது என்பதை அறியவே தமிழ் படிப்பதாகச் சொன்னார்.

நீங்கள்எதிர்பார்த்ததைப் போல தமிழ்மொழி படிப்பதற்கு எளிதாக இருக்கிறதா என்று கேட்டபோது, சிரித்த முகத்துடன் சற்றுச் சிரமமாயிருக்கிறதென்றாலும், அதைப் படிப்பதிலே தனிஆர்வம் இருக்கிறது என்று மலர்ச்சியுடன் கூறினார்.

தம் பேராசிரியர் பிலியோசா (பிரெஞ்சுப் பேராசிரியர்) என்பவரும்இம்மகாநாட்டிற்கு வந்துள்ளார்என்றும் தெரிவித்தார்.

இந்த மகாநாட்டிற்குப் பார்வையாளராக வந்திருக்கும் மற்றொருவர் அண்ணாமலைப்பல்கலைக்கழக விரிவுரையாளர் எம். வி. எம். அழகப்பன் எம். ஏ., எப். ஆர். எஸ்.

தென்கிழக்காசியாவில் குறிப்பாக மலாயாவில் நாகரிகம் பரவுவதற்கு எந்த அளவு தமிழ்மொழி உதவி செய்திருக்கிறது என்பதைப் பார்த்துப்போகவே தான் வந்துள்ளதாக கருத்துரைத்தார்.

தமிழ்த்துறை ஆராய்ச்சிக் கருத்தரங்குநிதிக்கு மலாயா பல்கலைக் கழகத்திலுள்ள செட்டியார்களின் அறவைப்புநிதியிலிருந்துமேலும் 3 ஆயிரம் வெள்ளி வழங்கப்பட்டிருக்கிறதென்று நிதிக்குழுவின் தலைவரான மந்திரி மாணிக்கவாசகம் தெரிவித்தார்.

ஏற்கனவே செட்டியார்கள் அறவைப்பு நிதியிலிருந்து 2ஆயிரம் வெள்ளி வழங்கப்பட்டது. மந்திரிமாணிக்கவாசகம் மீண்டும் கேட்டுக்கொண்டதன்பேரில் மேலும் 3000 வெள்ளியை நகரத்தார் சமூகத்தினர் வழங்கியிருக்கின்றனர்.

## பொலிஸ்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் நீதிமன்றம் வழக்கைநடத்தும்படி கேட்டால் நடத்துவதாகவும் கூறினார்.

நீதிபதி இன்ஸ்பெக்டர் மூர்த்தியிடம் இதுபற்றி விசாரித்தபொழுது திரு. மூர்த்தி இதுபற்றி அட்டோர்ணி ஜெனரல் விசாரணை செய்துள்ளதாகவும் அவரின் முடிவு இன்னும் கிடைக்கவில்லையென்றும் வழக்கை வேறோர் திகதிக்கு ஒத்திவைத்தால் அவரின் பதிலையறிந்து கூறலாமென்றும் சொன்னார்.

இதனையேற்ற நீதிபதி வழக்கை இம்மாதம் 30ம் திகதிக்கு ஒத்திவைத்தார். எதிரிதரப்பில் வழக்கறிஞர் திரு. ஜே. ஆர். செல்வரத்தினம் ஆஜரானார். பொலிஸ் தரப்பில் இன்ஸ்பெக்டர் திரு. மூர்த்தி ஆஜரானார்.

## ஐயாறன்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிந்தது. இவ்விதமான அன்பு வரவேற்பு தமக்குக் கிடைக்குமென்று தாம் நினைக்கவில்லையென்று வாய்விட்டுச்சொன்னார் அவர். கைலாசமலையை இராவணன் தூக்கி, ஒரு தலையை வீணையாக்கி சாமகானம் செய்வதும், மலைமீது, சிவலிங்கத்தை அம்மை அணைப்பதுமான அழகான சிற்பக் காட்சியை மகாநாயகா அண்ணார்ந்து பல நிமிடம் பார்த்துக்கொண்டிருந்தார். அவருக்கு அந்தக் கதையெல்லாம் தெரியுமோ தெரியாதோ!

பின்னர் வேப்பமரத்தடியிலுள்ள மேடைக்கு வந்தார் அவர். பெரிய ஆசனங்களைப் போட்டிருந்தனர். ஒன்றில் அவரும், மற்றதில் குருக்கள் அவர்களும் மஞ்சள் பீதாம்பரம் அணிந்து சரிசமமாக அமர்ந்திருந்த காட்சி அபூர்வமாகும்.

தமிழிலும் சிங்களத்திலும் வரவேற்புப்பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. புரக்டர் கனகரத்தினம் தேவார புராணம் பாடினார். புத்தர் பிரான் சித்திரை மாதம் அமாவாசையன்று தான் மணிபல்லவத்துக்கு வந்தாரென்றும் அதேசமயத்தில் மகாநாயகாவும் முதல்முதலாக அத்தீவுக்கு விஜயஞ் செய்வது குறிப்பிடத்தக்கதென்றும் கூறப்பட்டது. அம்மனின் அருளால் எல்லா நன்மையும் கிடைக்கும் என்று மகாநாயகா கூறி, ஒற்றுமையை வற்புறுத்தினார்.

பின்னர் பௌத்த விகாரைக்குச் சென்றார். அங்கு புத்தருக்குப் பக்கத்து அறையிலே கணபதி, பார்வதி, பரமேஸ்வரர், மகாவிஷ்ணு முருகன் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. அதற்கு ஏன் திரைபோட்டுள்ளனர் என்பது புரியவில்லை. இந்தத் திரைகள் நீக்கப்படவேண்டும். மகாநாயகாவின் விஜயத்தின் பயனாக இப்புனித தீவுக்கு இனி அதிகமாக யாத்திரிகர்கள் வந்து, இரு சமூக ஒற்றுமையும், இறை அருளால் பலப்படுமென்று உணரக்கூடியதாக இருந்தது.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் ஒரு கத்தோலிக்கராக இருந்தும், இந்த விஜயம் வெற்றிகரமாக எவ்வித அசம்பாவிதமுமின்றி முடிய எல்லாவித ஏற்பாடுகளையும் செய்தது பாராட்டத்தக்கது.

ஃ ஃ ஃ

பலாலி விமானநிலையத்திலிருந்து புறப்படுகையில், மகாநாயகாவும் மற்றப் பிக்குகளும் யாழ்ப்பாணத்தின் சுபிட்சத்துக்காகப் புனித பிரித் ஓதினர்.

ஃ ஃ ஃ

சிங்களப் பேச்சுக்களை உடனுக்குடன் தமிழ்ப்படுத்திய பாராளுமன்ற மொழி பெயர்ப்பாளர் தம்பிப் பிள்ளை அவர்களின் திறமையைப் பிஷப் உள்ளிட்டுப் பலரும் பாராட்டினர்.

ஃ ஃ ஃ

பேச்சொடு பேச்சுக்கெல்லாம் பிறர்தமைப் புறமே பேசக், கூசிலேன் ஆதலாலே கொடுமையை விடுமாறே ரேன், நாச்சொலி நாளும் மூர்த்தி நன்மையை உணரமாட்டேன், ஏச்சுளே நின்று மெய்யே என்செய்வான் தோன்றினனே.

— அப்பர் சுவாமிகள்

## சுவீப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா 173-25 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 11 C 0125 | 06 K 0270 |
| 04 C 0418 | 18 G 0199 |
| 09 L 0126 | 15 K 0128 |
| 08 C 0117 | 13 F 0896 |
| 21 K 0208 | 12 F 0566 |
| 05 Z 0114 | 18 H 0512 |
| 14 G 0205 | 16 K 0859 |
| 15 M 0055 | 04 N 0964 |
| 07 Y 0158 | 07 P 0453 |
| 14 F 0038 | 11 X 0828 |
| 09 L 0783 | 19 V 0825 |
| 01 G 0796 | 16 G 0335 |
| 15 G 0487 | 15 P 0207 |
| 17 F 0483 | 19 V 0510 |
| 10 F 0816 | 03 M 0378 |
| 20 U 0779 | 15 W 0951 |
| 20 S 0600 | 20 J 0825 |
| 03 R 0904 | 17 H 0164 |
| 02 D 0860 | 02 O 0066 |
| 05 L 0357 | 18 L 0044 |
| 06 M 0937 | 12 B 0549 |
| 07 P 0275 | 02 Z 0286 |
| 15 Q 0487 | 09 L 0652 |
| 08 P 0452 | 17 B 0189 |
| 13 N 0761 | 10 R 0906 |
| 17 E 0134 | 15 B 0424 |
| 05 A 0086 | 02 S 0841 |
| 10 F 0316 | 05 Y 0480 |
| 06 P 0024 | 21 S 0560 |
| 10 X 0964 | 10 J 0495 |
| 17 P 0580 | 08 C 0963 |
| 08 U 0787 | 02 S 0945 |
| 06 R 0957 | 16 Y 0104 |
| 05 Y 0100 | 19 G 0638 |
| 11 K 0106 | 10 K 0804 |
| 05 J 0866 | 19 O 0607 |
| 15 B 0510 | 11 M 0770 |
| 15 T 0624 | 19 Z 0433 |
| 05 D 0386 | 11 A 0780 |
| 11 X 0166 | 04 Z 0913 |
| 21 K 0511 | 08 P 0118 |
| 03 P 0015 | 11 J 0751 |
| 09 A 0815 | 10 T 0662 |
| 18 E 0985 | 10 R 0479 |
| 04 O 0223 | 12 B 0032 |
| 08 P 0120 | 16 W 0481 |
| 18 T 0338 | 17 G 0950 |
| 20 S 0770 | 04 N 0575 |
| 11 H 0629 | 05 Z 0716 |
| 03 P 0216 | 21 R 0065 |

## யாழ்ப்பாணத்தில்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

திரும்புவார் என்றும் அறியப்படுகிறது.

### அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்

இலங்கை அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் மேதினக் கூட்டத்தில் முக்கிய பேச்சாளராக ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம்கலந்துகொள்வாரென அறியப்படுகின்றது.

அரசாங்க எழுதுவினைஞர் சங்க மேதின ஊர்வலம் கஸ்ளியங்காடு சந்தியில் இருந்து ஆரம்பமாகி நகர மண்டபத்தை வந்தடையும். இக்கூட்டத்தில் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் ஆகியோர் பேசுவார்கள்.

அரசினர் பாடசாலை தமிழாசிரியர் சங்கம், மலைநாட்டுத் தமிழாசிரியர் சங்கம், மொழி வழித் தொழிற்சங்கங்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்கின்றன. அரசாங்க எழுதுவினைஞர் சங்க உபதலைவர் திரு எம். தம்பிமுத்து தலைமையில் இக்கூட்டம் நடைபெறும்.

யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் கழகப் பிரதிநிதிகளும் கலந்துகொள்வார்கள். தமிழரசுக்கட்சி எம். பி.க்களும் இக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றுவார்கள்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் நீண்ட ஊர்வலம் ஒன்றை நடாத்துவதற்கு இச்சங்கத்தினர் ஏற்பாடுகள் செய்துவருகின்றனர்.

## யாழ். உதை...

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

தக்கதாகும். சென். அந்தனிஸ் வலது முன்னணி வீரரான பெனடிக்ற் என்பவர் கோல்கள் போடுவதில் ஒரு புலியாகக் காணப்பட்டார். அடுத்தடுத்து கோல்களை வெளுத்துவாங்கினார் இடைவேளையின்போது ஜொலிஸ்ரார்ஸ் கோஷ்டியினர் ஒரு கோலும் அடிக்காத வகையில் பாஷையூர் கோஷ்டியினர் 4 கோல்கள் பெற்றிருந்தனர். இடைவேளைக்குப்பின்னர் நடந்த போட்டியில் ஜொலிஸ்ராஸ்கோஷ்டியின் விளையாட்டுத்தரம் ரசிப்பாகக் காணப்பட்டது. எனிலும்பாஷையூர்கோஷ்டி ஈடுக்கொடுக்காமல் போட்டியிட்டது. ஜொலிஸ்ராஸ் வலது முன்னணி வீரர் ஒரு கோலை அற்புதமாக அடித்தபின்பு விளையாட்டு உச்சக் கட்டத்தை அடைந்திருந்தது. எதிர்பாராத வகையில் கடைசி நேரத்தில் இரு கோஷ்டிக்குமே 'பனால்டி' கிடைத்தன. பாஷையூர் கோஷ்டியினர் இச்சந்தர்ப்பத்தைத் தவறவிட்டநேரத்தில் ஜொலிஸ்ராஸ் வீரர்கள் இதைப் பயன்படுத்திஒருகோல்பெற்றனர். இப்போட்டி முடிவில் பாஷையூர் கோஷ்டியினர் ஜொலிஸ்ரார்ஸ் கோஷ்டியை 4—2 கோல்களால் வெற்றியீட்டினர். இப்போட்டிக்கு கே. கிருஷ்ணன் மத்தியஸ்தம் வகித்தார். இப்போட்டிகள் யாவும் பீச்றோட் பண்ணை மைதானத்தில் நடைபெற்றது.

## இசை விழா

### இன்றையநிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சன சபாவின் 15-வது ஆண்டு இசைவிழா இரண்டாவது நாள் நிகழ்ச்சிகள்: 5-15 கல்லூரி மாணவிகள் மிருதங்கம். 6-15 செல்வி கனகாம்பிகை இளையதம்பி பாட்டு. 7-00 திரு, எஸ். முத்துலிங்கம் பாட்டு 8-15 தலைமையுரை: யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் திரு. த. அல்பிறெட் துரையப்பா. 8-30 திருமதி விமலராணி பாட்டு, 9-45 திருப்பூங்குடி வி. க. ஆறுமுகம் வில்லுப்பாட்டு.

## உபதேர்தல்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 12-ம் வட்டார உபதேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் மே மாதம் 9-ம் திகதி காலை ஏற்றுக்கொள்ளப்படவிருக்கிறது.

இவ்வட்டார அங்கத்தவராகவிருந்து ராஜினாமாச் செய்த ஹாஜி எம். எம். சுல்தானின் இடத்திற்கே இத்தேர்தல் நடைபெறுகிறது.

## இலங்கை தொழிற்சங்க சம்மேளனம்

இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் மேதினக் கூட்டம் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெறும்.

அன்று மாலை பழைய பஸ்நிலையத்திலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி பருத்தித்துறைவீதி, அரசடிவீதி, காங்கேசன் துறை வீதி, மானிப்பாய்வீதி வழியாக முற்றவெளி மைதானத்தை வந்தடையும்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும் கூட்டாகச் சேர்ந்து நடாத்தவிருக்கும் இம் மேதினக் கூட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய சிமெந்துத் தொழிலாளர் சங்கம், பரந்தன் ரசாயன ஊழியர் சங்கம், ஐக்கிய இலங்கை பீடித்தொழிலாளர் சங்கம், இலங்கை வாலிபர் சம்மேளனம், மாணவர், விவசாயிகள் இயக்கம் ஆகியவை கலந்துகொள்ளும்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 62-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org